


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகிழ்




## இதழ் 01

**சிறுவர் வாசிப்பு வட்டம்**

**பொது நூலகம்**

**வலிகாமம் தெற்கு பிரதேச சபை**

**சுன்னாகம்**

**2022**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் எண்ணக்கருக்கள்

சிறுவர் வாசிப்பு வட்ட "**முகிழ்**" சஞ்சிகையினூடாக உங்களை சந்திப்பதில் பெருமகிழ்வு அடைகின்றோம். சுன்னாகம் பொது நூலக வாசிப்பு விரிவாக்கல் செயற்பாடுகளில் ஒன்றாகச் சிறுவர் வட்டம் 12.11.2021 அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. அதன் நோக்கங்களில் ஒன்று சிறுவர்களிடம் வாசிப்பு பழக்கத்தை உருவாக்கி அதனை மற்றைய சிறுவர்களுக்கும் சென்றடையச் செய்வதாகும். அதன் ஒரு சிறு செயற்பாடாக வாசிப்பு வட்டச் சிறார்களின் பல்வேறு திறமைகளை ஒன்று திரட்டி சிறுவர் சஞ்சிகை ஒன்றினை வெளியிடத் தீர்மானித்தோம். அதனூடாக ஒவ்வொரு சிறாரிடமும் புதைந்திருக்கும் திறமைகளை வெளிக்கொணர்வதே நோக்கமாகும். அது சிறுவர்களின் ஆரம்ப நிலை என்பதால் மொட்டிலிருந்து வெளியாகும் ஆரம்ப பருவம் "**முகிழ்**" என நாமமிட்டு நாம் வெளியிடும் இவ் ஆரம்பச் சஞ்சிகைக்கு ஊக்கமளித்து எமது செயற்பாடுகளுக்கு உறுதுணையாக இருக்கும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் வாசிப்பு வட்டம்

சிறு வயதிலேயே சிறுவர்களிடம் வாசிப்பை அறிமுகப்படுத்தி மேம்படுத்த வேண்டும் எனும் நோக்கில் சுன்னாகம் பொது நூலகத்தில் 12.11.2021 அன்று சிறுவர் வாசிப்பு வட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இவ் வாசிப்பு வட்டமானது வாசிப்பை மேம்படுத்துவதுடன் நின்றுவிடாது சிறுவர்களிடம் நிர்வாகத் திறனையும் உருவாக்கும் முகமாக தலைவர், செயலாளர், பொருளாளர் எனச் சிறுவர் நிர்வாகத் தெரிவுகள் மேற்கொள்ளப்பட்டு அவர்களே நிர்வாகத்தினையும் திறம்பட நடாத்திச் செல்கின்றனர்.

இவ் வாசிப்பு வட்டச் செயற்பாடுகள் ஒன்றுவிட்ட ஒரு வெள்ளிக்கிழமைகளில் சிறுவர்கள் ஒன்றுகூடி நூல்கள் வாசித்தல், நூல் விமர்சனம் செய்தல், பாட்டுப் பாடுதல், கவிதை சொல்லல், விடுகதை பொது அறிவு வினாக்களை வினாவி விடை காணுதல் எனப் பல்வேறு நிகழ்வுகள் நடைபெறுகின்றன. இச் செயற்பாட்டால் மேடைக் கூச்சம், தயக்கம் என்பன நீங்கப்பெற்று எதற்கும் தயாராகும் பயிற்சி அனுபவம் கிடைக்கின்றது. மேலும் சிறுவர்களை உற்சாகமூட்டும் வகையில் விளையாட்டுக்களும் இடம்பெறுகின்றன. இத்தகைய செயற்பாடுகளை தொடர்ந்து செயற்படுத்தி வாசிப்புடன் எதிர்கால எழுத்தாளர்கள், கவிஞர்கள், பேச்சாளர்கள், ஓவியர்கள் எனப்பலரையும் இனங்கண்டு வெளிக்கொணர்வதும் எமது நோக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் வாசிப்பு வட்ட நிர்வகம்

| இல | பெயர் | பதவி | புகைப்படம் |
| --- | --- | --- | --- |
| 01 | செல்வி<br>அபிநயா சுதேஸ்வரன் | தலைவர் |  |
| 02 | செல்வன்<br>சதீஸ்குமார் கிஷோன் | உப தலைவர் |  |
| 03 | செல்வன்<br>தவக்குமார் அபிஷேக் | செயலாளர் |  |
| 04 | செல்வன்<br>அமிர்தலிங்கம் தேனுஜன் | உப செயலாளர் |  |
| 05 | செல்வன்<br>பத்மநாதன் கரிகரன் | பொருளாளர் |  |
| 06 | செல்வன்<br>பிரேமநாதன் கிரிசன் | உறுப்பினர் |  |
| 07 | செல்வன்<br>கேதாகரன் டோனிசன | உறுப்பினர் |  |
| 08 | செல்வன்<br>பிரசன்னா கிருத்திகன் | உறுப்பினர் |  |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 09 | செல்வன்<br>பாலரமணன் ஜஸ்வின் | உறுப்பினர் |  |
| 10 | செல்வி<br>ஜெயக்குமார் தன்சிகா | உறுப்பினர் |  |
| 11 | செல்வன்<br>குகதீஷ் டக்சின் | உறுப்பினர் |  |
| 12 | செல்வன்<br>பாலரமணன் விஸ்மிதன் | உறுப்பினர் |  |
| 13 | செல்வன்<br>கேதாகரன் டினோசன் | உறுப்பினர் |  |
| 14 | செல்வன்<br>சுதேஸ்வரன் ஆதீஷன் | உறுப்பினர் |  |
| 15 | செல்வி<br>சிவரூபன் தஸ்மிஜா | உறுப்பினர் |  |
| 16 | செல்வன்<br>திவாகரன் தரணிகன் | உறுப்பினர் |  |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 17 | செல்வன்<br>பிரேமநாதன் அருசனன் | உறுப்பினர் |  |
| 18 | செல்வன்<br>எஸ்.சத்சரன் | உறுப்பினர் |  |
| 19 | செல்வன்<br>விக்னேஸ்வரன் ஆருஜன் | உறுப்பினர் |  |
| 20 | செல்வன்<br>எயுயீன் மசனட்<br>போல்நியூலியன் | உறுப்பினர் |  |
| 21 | செல்வி<br>அக்ஷயா<br>அருட்பாஸ்கரன் | உறுப்பினர் |  |
| 22 | செல்வி<br>ஜெயக்குமார் தருணிகா | உறுப்பினர் |  |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியின் சிறப்பு

கல்வி அறிவில் சிறந்தவர்கள் சமூகத்தில் உயர்ந்தவராக மதிக்கப்படுவார்கள். கல்வி அறிவு உடையவர்கள் தமது நிலையை மேலும் உயர்த்திக் கொள்வர். இதனை ஔவையார் கூறுகிறார் "மன்னனும் மாசற கற்றோனும் சீர்தூக்கின் மன்னனின் கற்றோன் சிறப்புடையன் மன்னனுக்கு தன்தேசம் அல்லால் சிறப்பில்லை கற்றோருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு" என்று கற்றவர்களை பாராட்டுகிறார்.




கல்வி அறிவு இல்லாதவர்களுக்கு நாம் எமது கல்வி அறிவினால் உதவி செய்ய முடியும். கல்வி அறிவினால் நல்ல எண்ணங்களும் சிறந்த பண்புகளும் கிடைக்கும். இதனை திருவள்ளுவர் " கற்றவை கற்றபின் நிற்க அதற்குத் தக" என்று கூறுகின்றார்.

கல்வி அறிவினை பெற முடியாதவர்களை திருவள்ளுவர் விலங்குகள் என்கிறார். கல்வி அறிவு இல்லாதவர்கள் நற்பண்புகளும் நற் பழக்க வழக்கங்களும் இன்றி தவறான வழிகளில் செல்வார். கற்காமல் விடுபடுவது இருகண் இன்றி வாழ்வதனை போன்று அமைந்துவிடும் இதனை திருவள்ளுவர் "கண்ணுடையோர் என்போர் கற்றோர் கல்லாதோர் முகத்திரண்டு புண்ணுடையார்" என்று கல்லாதவர்களை பார்வை அற்றவர்கள் எனவும் கூறுகிறார்.




கல்வி ஏனைய செல்வங்களை விட சிறப்புடைய செல்வமாக காணப்படுவதற்கு காரணம் வெள்ளத்தால் அழியாது நெருப்பினால் வேகாது வேறு ஒன்றாலும் கொள்ளவும் முடியாது கொடுக்க கொடுக்க நிறைவின்றி குறைவடையாது என கல்வி ஒரு அழியாத செல்வமாகும்.

பி.அருசனன்

யாழ்/இந்துக் கல்லூரி

தரம் 08

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா கவிதை

கத்தியின்றி இரத்தமின்றி
யுத்தம் ஒன்று புறப்பட்டது
சீனாவில் ! உலகமக்கள்
இதயத்தை பிளந்து உயிரை
குடிக்கிறது ! குடித்துக் கொண்டே
இருக்கிறது கொடிய கொரோனா வைரஸ்
உன்னை அடியோடு அழித்திடுவோம்
அகிலத்தைக் காத்திடுவோம்

இதுவும் கடந்து போகும்
கொரோனா மெதுவாய்
நம்மை விட்டு கடந்து போகும்
எதுவும் நிலையில்லை என்றிருக்கும் போது
பொதுவாய் நின்றிடும் தொற்றேது

சி.தஸ்மிஜா
உடுவில் மகளிர் கல்லூரி
தரம் 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது பிரயாண அனுபவம்

நான் எனது உறவினருடன் விடுமுறைக்கு சுற்றுலா சென்றேன். எனக்கு பிடித்த இடமாகிய யால வனவிலங்கு காட்டுக்கு செல்ல விரும்பினேன். அவர்கள் என்னை கூட்டிச்சென்றனர். எனக்கு காட்டுக்குள் செல்ல பயமாக இருந்தது. இருப்பினும் விலங்குகளை அவர்கள் இருப்பிடங்களை பார்க்க விரும்பினேன். மிருகக்காட்சி சாலையில் அடைத்து வைத்துள்ளனர். ஆனால் இங்கு அவர்களின் இடங்களை நாம் தேடிப்பார்க்கும்போது சுவாரசியமாக இருந்தது.

நாம் தனி வாகனம் ஒழுங்குபடுத்தி கொழும்பிலிருந்து மதியம் புறப்பட்டு நெடுஞ்சாலை மூலம் சென்றோம். அதற்கு 650ரூபா கட்டணம் செலுத்தினோம். பாதை முழுவதும் குடிமனைகள் அற்ற இயற்கை எழில் உடையதாக காணப்பட்டது. மத்தளன் விமானநிலையம் திசவேவா சமுத்திரம், வில்பத்து வனவிலங்கு, பூங்கா வழியாகவே சென்றோம். வழியில் மலைகுன்றுகள் பயிர்செய்கை நிலம் காட்டுப்பகுதியாக காணப்பட்டது. வழியில் சில பகுதியில் மிருகங்கள் பாதையை கடப்பதாக அந்த விலங்குகளின் படங்கள் போட்டு எச்சரிக்கை பலகை அமைக்கப்பட்டிருந்தது.

சுமார் 6மணித்தியாலத்தின் பின்னர் யால வனவிலங்கு பூங்கா செல்லும் நுழைவாயிலை அடைந்தோம். போகும் வழியில் விலங்குகளின் படங்கள் போட்ட பாதைகள் காணப்பட்டது. அப்பகுதியில் அந்த விலங்குகள் அதிகம் வரும் பாதை என்று குறிப்பிட்டனர். நாம் வாகனத்தின் கரையில் இருந்து பயத்துடனும் விலங்குகளை பார்க்கமாட்டேனா என்ற ஏக்கத்துடனும் பார்த்துக்கொண்டு நாம் தங்கும் விடுதியை நோக்கிச்சென்று கொண்டிருந்தோம் மயில்கள் வித்தியாசமான பறவை இனங்கள் அவைகளின் சத்தங்கள் மனதிற்கு இதமாக இருந்தது.




விடுதியை அடைந்தோம் எங்களை அன்புடன் வரவேற்றனர் ஆங்கிலம் சிங்களம் இருமொழிகளிலும் தான் கதைத்தார்கள் அப்போது எனக்கு பிறமொழி படிக்க வேண்டும் என்று ஆர்வம் ஏற்பட்டது. அத்தோடு இருமொழியின் அவசியம் புரிந்து கொண்டேன்.

எமக்கு ஒதுக்கப்பட்ட அறைக்கு சென்றோம். காட்டின் ஓர் எல்லைப்பகுதி அருகில் கடல் காணப்பட்டது. கம்பி கேடர்களால் அமைக்கப்பட்ட மரத்தால் செய்த அறைகள். அவர்கள் எங்களை மாலை 6மணிக்கு பின் தனியே செல்லக்கூடாது என்று அறிவுறித்தினர். தேவை ஏற்படின் அவர்களின் உதவியை நாடவேண்டும் இரவு நாம் உணவு அருந்திவிட்டு அறையில் முற்பகுதியில் இருந்தோம் அப்போது நிறைய கறுப்பு நிறமான காட்டுப்பன்றிகள் கூட்டமாக சென்றதை பார்த்து பயத்துடன் வீடியோ எடுத்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தநாள் அதிகாலையில் மிகவும் சந்தோசத்துடன் அதிகாலை 3மணிக்கு எழும்பி விடுதியில் உணவுப்பொதிகள் தந்தனர் அதை எடுத்துக்கொண்டு காட்டுக்கு சுற்றுலாக்கு நாம் ஒரு ஜீப் வாகனத்தில் குறிப்பிட்ட தொகையை குறிப்பிட்ட நேரத்திற்கு செலுத்த வேண்டும் மேலதிகமாக நாம் பயணம் மேற்கொள்ள வேண்டுமெனின் மேலதிக கட்டணம் செலுத்த வேண்டும்



ஏறத்தாழ 30க்கு மேற்பட்ட வாகனங்கள் புறப்பட்டன. பல வெளிநாட்டவரும் பயணம் மேற்கொண்டனர். நுழைவாயிலில் பற்றுச்சீட்டு பெறவேண்டும் இலங்கையருக்கு வேறு கட்டணம் வெளிநாட்டவர்க்கு வேறு கட்டணம் நுழைவாயில் 6மணிக்குதான் திறப்பார்கள் நாம் 5.30மணிக்கே அங்கு சென்று வாகனத்தில் இருந்தோம் எருமைகள் கூட்டமாக நீர்நிலைகளை நோக்கி வந்து கொண்டிருந்தது. அப்போது சாரதி கூறினார் கொம்பால் வாகனத்திற்கு ஊறு விளைவிக்கும் என்று நாம் பயந்து விட்டோம் காட்டுக்கோழிகள் மிக அழகாக இருந்தது. மயில்கள் நிறைய நாம் போகும் கரைகளில் சுயமாக திரிந்து கொண்டு இருந்தது. தோகையோடு அழகாக இருந்தது. நீர்நிலைகளுக்கு அருகே மான் கூட்டங்கள் நிறைய இருந்தது அருகே போகமுடியவில்லை.

குரங்குகள் பலவகையான பறவைகள் நீர்நிலைகளில் அருகில் உள்ள மரங்களில் இருந்து Eagle, ஆந்தை, பருந்து, முதலை, பன்றி, சிறுத்தை, கரடி பார்த்தேன் யானைகள் கூட்டமாக வந்து நீரில் குளிப்பதை பார்த்தோம். பிறந்து ஒரு கிழமையான யானைக்குட்டியையும் கூட்டிவந்தது தாய்யானை கரையிலே நின்று குளித்தது வாகனத்தின் சத்தத்திற்கு அவைகள் காடுகள் நோக்கி விரைந்தன. ஏனைய சாரதிகள் வாகனங்களை நிறுத்தி சத்தம் போடாது சிலமணி நேரம் நின்றோம் அப்போது அவை தொடராக பாதையை கடந்ததை பார்த்தோம்



சாரதிகள் ஒவ்வொருவரும் பல திசைக்கு செல்வர் அவர்கள் தாம் ஏதும் விலங்குகளைப் பார்த்தால் தொலைபேசியில் கூறுவர் ஏனையோரும் வருவார்கள் பாதைகள் குன்றும் குழியுமாக இருக்கும் இதனால் வாகனம் சீராக செல்லாது குன்றில் ஏறும்போது கத்திவிட்டேன் பலநீர்நிலைகள் உண்டு அதனை நோக்கியே வாகனங்கள் செல்லும் குளிக்க நீர் அருந்த வரும்போது அவற்றை காணக்கூடியதாக இருக்கும் கமரா தொலைநோக்கி தொலைபேசி எல்லோரும் வைத்து படம் எடுத்தனர். நாமும் எடுத்தோம் அன்று மாலை நாம் தங்கிய அறைக்கு அருகில் உள்ள கடல் கரைக்கு சென்றோம் அது இலங்கையின் கரையோர இந்துசமுத்திரம் அலைகள் மிக அழகானது மலை பாதையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடித்து கதறும்போது சத்தம் அழகுதான், அக்கரையில் மணல்சோகி நிறைந்தது அத்தோடு இரவு விலங்குகள் வந்த பதிவு சுவடுகள் மலம் இருந்தது அதிலும் விலங்குகள் படம் போட்டு எச்சரிக்கை பலகை இருந்தது எனக்கு மீண்டும் அதற்கு செல்ல ஆசை தூண்டுகிறது மிருகக்காட்சி சாலையில் அடைத்த விலங்குகளை பார்ப்பதைவிட இங்கு பார்ப்பது அவர்கள் சுதந்திரமாக இயங்குகின்றன



த.அபிஷேக்
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி
தரம் 10



ஜெயக்குமார் தருணிகா

சிவன் முன்பள்ளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதையை ஒழிப்போம்

அரிது அரிது மானிடராதல் அரிது என்று பாடினார் மூதாட்டி ஔவையார் உலகில் தலைசிறந்த உன்னத படைப்பாக கருதப்படுவது மானிடப்பிறவியே. இதன் சிறப்பை அறியாத சிலர் தம் மதியை கெடுக்கும் போதைக்கு அடிமையாகி வாழ்வையே கெடுத்துக்கொள்கிறார்கள். நன்மை தீமைகளை பகுத்தறியும் ஆற்றலை இறைவன் மனிதனுக்கு மட்டுமே கொடுத்துள்ளான். போதை வாழ்க்கையை பாழாக்கும் என்பதை தெரிந்தும் அதன் சேவகனாக மனிதன் விளங்குகிறான். தனக்கும் சமூகத்திற்கும் நாட்டிற்கும் களங்கத்தை ஏற்படுத்திக்கொள்கிறான்.

இலங்கையில் நாளுக்குநாள் அதிகரிக்கும் களவு, பாலியல், வன்புணர்வு போன்ற குற்றச் செயல்களுக்கு அடிப்படைக் காரணியாக போதைப்பொருள் பாவனையே காரணமாகிறது. போதைப் பொருள்கள் பல வகையில் காணப்படுகின்றது. புகையிலை, சிகரெட், தூள் வகைகள், மது வகைகளான கள், சாராயம், கஞ்சா, அபின், பிரண்டி, விஸ்கி எனப் பலவிதங்களாக போதைப் பொருட்கள் காணப்படுகின்றன. வெற்றிலை கூட ஒரு போதைப் பொருளாகவே காணப்படுகின்றது.

இக்காலத்தில் இலங்கையில் போதைப் பொருள் பாவனையானது பெரியவர்களை மட்டுமன்றி இளம் சமூகத்தினரையும் ஏன் சிறுவர்களையும் ஆக்கிரமித்துள்ளது. இலங்கையை பொறுத்தவரையில் அதிகமாக போதைப் பொருள் பாவனைக்கு ஆண்களே அடிமையாகின்றனர். இப் போதைப் பொருளுக்கு அடிமையாவதற்கான காரணங்களும் ஆய்வின் மூலம் முன்வைக்கப்பட்டுள்ளது.

சிலர் தம் துன்பங்களை மறந்து மகிழ்ச்சியடைவதற்காக மது அருந்துவதாக கூறுகின்றனர். இது குளிக்கப் போகும் போது சேற்றில் விழுந்த கதையாகும். சிலர் தாம் செய்த வேலையின் களைப்பை ஆற்றுவதற்காக கூறி நோயை விலை கொடுத்து வாங்குகிறார்கள்.

மேலும் சிலர் திரைப்படங்களை பார்த்துவிட்டு கதாநாயகன் போன்று தாமும் மாறவேண்டுமென மது அருந்துகிறார்கள். இவர்கள் போன்று நாமும் போதைப் பொருளுக்கு அடிமையாகி எமது வாழ்வை சீர்கெட செய்யாது சிறப்புடனும் நோய் நொடி இன்றியும் வாழ்வோமென உறுதிமொழி பேணுவோம்.




அ.தேனுஜன்
யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி
தரம் 09

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுத்தோட்டம்

இது எமக்கு மிகவும் பொழுதுபோக்கு மனஅழுத்தத்தை குறைப்பதாயும் புத்துணர்வை ஏற்படுத்துவதாயும் இது அறியப்படுகிறது. எமக்கு தேவையானவற்றை நாமே உற்பத்தி செய்கின்ற சுயதேவை பொருளாதாரமுறை தருகின்ற மகிழ்சியை வேறு எதனாலும் தந்துவிடமுடியாது. பொதுவாக நாம் வீடுகளிலும் அருகில் அல்லது பின்புறமாகவோ சிறிய அளவு நிலத்தில் எமக்கு தேவையான காய்கறிகள் கீரைவகைகள், தானியங்கள், பழவகைகள் இவற்றை எமது சொந்த முயற்சியில் இயற்கையான முறையில் பயிரிட்டுக்கொள்ளுதல் வீட்டுத்தோட்டம் ஆகும். இது எமது நீண்டகால கலாச்சாரத்தோடு இணைந்த ஒன்றாகும். எமது தேவைகளை இலகுவாக நிறைவேற்றி கொள்ள முடிவதுடன் பணமும் நேரமும் அதிகளவில் மிச்சம் ஆகுவதுடன் பல நன்மைகளும் எமக்கு கிடைக்கிறது.

இன்றைய காலகட்டங்களில் கொரோனா போன்ற நோய்கள் தொற்றுக்களால் அனைவரும் வீடுகளிலே முடங்கி இருக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது. இது போன்ற பேரிடர் காலங்களில் எமது உணவுத்தேவைகளை பூர்த்தி செய்தல் மிகவும் சவாலானதாக இருக்கும் இவ்வாறான சவாலான பொருளாதார நெருக்கடிகள், பஞ்சம் என்பன ஏற்படும் காலங்களில் இவற்றை சமாளிக்க வீட்டுத்தோட்டம் உதவியாக இருக்கும். வீட்டுத்தோட்டம் எளிமையாகவும் சுலபமாகவும் எமது தேவைகளை பூர்த்தி செய்ய உதவுகிறது.



எமது நாடுகளில் மட்டுமன்றி வளர்ந்த நாடுகளிலும் வீட்டுத்தோட்டம் என்ற விடயம் மிகச்சிறந்த பொழுதுபோக்காகவும் காணப்படுகின்றது ஏனைய பொழுதுபோக்குகளை விட இது பயனுள்ளது. தொடர்மாடி குடியிருப்புகளில்கூட சாடிகளில் வீட்டுத்தோட்டம் செய்கிறார்கள். அந்த அளவிற்கும் வீட்டுத்தோட்டம் பயனுள்ள பொழுதுபோக்காகும். விவசாயம் ஆத்மதிருப்தி தரவல்லது. இது எமக்கு மாலைவேளைகளில் இளைப்பாறுதலையும் புத்துணர்வையும் சிறியஅளவில் பொருளாதார இலாபங்களையும் தருவதனால் அதிகளவான மக்கள் வீட்டுத்தோட்டத்தை தமது பொழுதுபோக்காக செய்து வருகின்றனர்.

வருடத்தின் எல்லா நேரங்களிலும் ஒரு பச்சை வீட்டு இல்லத்தை அமைத்து நல்ல பயிர்களை நாட்டி எமது தேவைக்கு ஏற்ப காய்கறிகளை பெற்றுக்கொள்ளலாம். அதிக இலாபமும் ஈட்டலாம். வீட்டுத்தோட்டத்தின் மூலமாக பலவிதமான அலங்கார மலர்செய்கை, பழங்கள், கிழங்குகள் என பல பெறுமதியான உற்பத்திகளை எம்மால் குறைந்த செலவில் மேற்கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய காலகட்டத்தில் சந்தைப்படுத்தலை மையமாக கொண்டு மரக்கறிகள், பழங்கள் போன்ற அசேதன இரசாயன பசளைகள் அதிகமாக பயன்படுத்தி விளைவிக்கப்படுகின்றது. இவற்றை உண்பதனால் எமக்கு அதிக நோய்கள் ஏற்படுகின்றது. வீட்டுத்தோட்டத்தில் உள்ள உணவுகளை உண்பதால் சுத்தமான புதிய காய்கறிகளை பெற்றுக்கொள்ளலாம். வீட்டுத்தோட்டங்கள் மூலமாக அதிகளவான நன்மை கிடைக்கின்றது. வீட்டுத்தோட்டம் செய்து நல்ல பலன்களை பெறுவோம்.



பி.கிரிசன்

யா/கொக்குவில் இந்துக் கல்லூரி

தரம் 10




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கு.டக்சின்

யா/ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாலயம்

தரம் 01



அ.அக்ஷயா

யா/சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை

தரம் 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரங்கம்

சதுரங்கம் என்பது இரண்டு வீரர்களுக்கான தந்திரோபாயதிறன் கொண்ட ஒரு பலகை விளையாட்டு. அறுபத்து நான்கு கட்டங்களை கொண்ட பலகையில் விளையாடப்படும் இவ்விளையாட்டின் நகர்தல்கள் துல்லியமான விதிகளின்படி நகர்த்தப்படும். ராஜா, ராணி, கோட்டை, மந்திரி, குதிரை மற்றும் சிப்பாய் போன்ற காய்களை கொண்டு விளையாடப்படும் இவ்விளையாட்டின் நோக்கம் எதிரியின் ராஜாவை தப்பிப்பதுக்கு சாத்தியமின்றி நேரடித்தாக்குதலுக்கு உட்படுத்தல் ஆகும்.

சதுரங்கத்தின் வரலாறு கிட்டத்தட்ட 1500 ஆண்டுகளுக்கு முற்பட்டது. இவ்விளையாட்டு இந்தியாவில் ஆரம்பிக்கப்பட்டு சதுரங்கா என அழைக்கப்பட்டது. இந்தியாவில் இருந்து பெர்சியாவிற்கு பரவிய இவ்விளையாட்டு அரபுப்படையெடுப்பு பெர்சியாவை கைப்பற்றியதை தொடர்ந்து முஸ்லிம் உலகத்தால் எடுத்துக்கொள்ளப்பட்டது. பின்னர் தெற்கு ஐரோப்பாவிற்கு பரவியது. இவ்வாறாக இவ்விளையாட்டு தற்சமயம் உலகம் முழுவதும் பிரசித்தி பெற்ற விளையாட்டாக திகழ்கிறது.

இவ்விளையாட்டு அறிவாற்றல் திறன்களை மேம்படுத்துகின்றது. அதாவது செறிவு, வடிவ அங்கீகாரம், முடிவெடுத்தல், இயற்கணிதம், சிக்கலைத்தீர்ப்பது, இடஞ்சார்ந்த பகுத்தறிவு மற்றும் விமர்சன சிந்தனை உட்பட தன்னம்பிக்கை மற்றும் சுயமதிப்பை மேம்படுத்துகிறது. இவ்விளையாட்டு அல்சைமர்நோய் மற்றும் டிமென்ஷியாவை தடுக்க உதவுவதுடன் ஸ்கிசோ.்.ப்ரினியா சிகிச்சைக்கு உதவுகிறது. மூளையில் டெண்டரைட்டுக்களின் வளர்ச்சியை ஊக்குவிப்பதுடன் மூளைக்கு பயிற்சி அளித்து IQ நிலைகளை அதிகரிக்கின்றது. தினமும் சதுரங்கம் விளையாடுவது கவலை மற்றும் பிற கொந்தளிப்பான உணர்ச்சிகளை நிர்வகிக்க உதவுகிறது.

சதுரங்கம் கற்கும் குழந்தைகள் விளையாட்டுத்திறன், மரியாதை, நேர்மை, பொறுமை, தலைமைத்துவம், நம்பிக்கை, சகிப்புத்தன்மை மற்றும் சுயகருத்து போன்ற முக்கியமான திறன்களை மேம்படுத்துகிறார்கள் என்பது நிரூபிக்கப்படுகின்றது. மேலும் உலகெங்கிலும் உள்ள பல ஆய்வுகள் சதுரங்கம் பாடங்களுக்கும் கல்வித்திறனுக்கும் இடையே நேரடித்தொடர்பை காட்டுகின்றது என குறிப்பிடுகின்றன. குறிப்பாக கணிதபாடம், சதுரங்கம் விளையாடும் மாணவர்கள் கணித பாடத்திலும் அதிக பெறுபேற்றை பெறுகின்றனர் என ஐயமின்றி குறிப்பிடலாம்.



சு.அபிநயா
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி
தரம் 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முயல் வளர்ப்பு



முயல்களில் அங்கோர, கலிபோனியா, இங்லிஸ் ஸ்பொட் எனப்பலவகை இனங்கள் உண்டு. சாதாரணமாக ஒரு முயல் வளர்ந்து ஆறு மாதங்களின் பின் குட்டிபோட ஆரம்பிக்கும். அதன் கருக்காலம் 30 நாட்கள் ஆகும். ஒரு தடவையில் 6 – 10 வரை குட்டிகள் போடும். 12 நாட்களின் பின்னரே குட்டிகள் கண் திறக்க ஆரம்பிக்கும். 17 நாட்களின் பின் சிறிது சிறிதாக சாப்பிட ஆரம்பிக்கும். இலை குழைகளை காலை மாலை இருவேளை வைத்தால் போதும் தண்ணீர் எப்பொழுதும் குறையாமல் இருக்க வேண்டும்.

ஓன்றரை மாதத்தில் தாயிடமிருந்து குட்டிகளை பிரிக்கலாம். முயலின் கழிவுகள் சிறுநீருடன் கலந்து விரைவில் புழுப்பிடிக்கும் இது முயலுக்கு குட்டை போன்ற நோய்களை உருவாக்கும். எனவே முயல் கூட்டை எப்போதும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். குட்டை பிடித்தால் தேங்காய் எண்ணெயில் கற்பூரத்தை சூடுகாட்டி போட்டால் மாறிவிடும்.

கூடுகளில் வளர்க்காமல் ஒரு நிலப்பகுதியை அதற்கென ஒதுக்கி அவ்விடங்களிலும் முயல்களை வளர்க்கலாம். அவ்விடத்தில் முயல் ஒரு இடத்தை தெரிவுசெய்து தானே பொந்து அமைத்து அதில் குட்டிபோட்டு அழகாக பராமரிக்கும். தவளை, வேறு பூச்சிகள். எலி பொந்தினுள் போகாதவாறு நாம் கவனிக்க வேண்டும். கூடுகளில் குட்டி போடுவதற்காக மண்பானை, 20L மஞ்சள் கொள்கலன், மரப்பெட்டி என்பவற்றை பயன்படுத்தலாம். குட்டிபோட முன்னர் முயல் தனது முடியை பிய்த்து குட்டி போடும் இடத்தை மெத்தைபோல அமைக்கும் இது முயலின் சிறப்பம்சமாகும்.



முயல் வளர்ப்பதால் மனதிற்கு மகிழ்ச்சி கிடைக்கிறது. மேலதிக குட்டிகளை விற்பதால் பணமும் கிடைக்கிறது. முயல் பிழுக்கைகள் சிறந்த பசளையாக பயன்னடுத்தலாம். எனவே முயல் வளர்ப்பு சிறந்த ஒரு பொழுதுபோக்காகும்.

சு.ஆதீஷன்
யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி
தரம் 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி விபத்துக்களை தடுக்கும் வழிகள்

- வாகனங்கள் ஓட்டும் போது தொலைபேசி பேசக்கூடாது.
- வீதியில் சிறுவர்களை போக விடக்கூடாது.
- வீதியில் விலங்குகளைக் கண்டால் நிறுத்தி ஓட்ட வேண்டும்.
- வீதியில் வீதிச்சமிஞ்சைகளை அவதானித்து போக வேண்டும்.
- ஒரு வாகனம் வந்தால் நின்று போக வேண்டும்.

கே.டோனிசன்
யா/சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை
தரம் 03




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கே.டினோசன்

அறிஞர் ஐயன்னா முன்பள்ளி



பா.ஜஸ்வின்

சிவன் முன்பள்ளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுகதை

கள்ளனுக்கு காவல் காற்றுக்கு தோழன் அது என்ன?

ஜன்னல்

நடக்க முடியாது ஆனால் நகராமல் இருக்காது அது என்ன?

கடிகாரம்

குளித்தால் கறுப்பு குளிக்காவிட்டால் சிவப்பு அது என்ன?

தணல்

அள்ளவும் முடியாது கிள்ளவும் முடியாது அது என்ன?

காற்று

பக்கத்திலுள்ள பட்டணத்தை பார்க்க முடியவில்லை அது என்ன?

முதுகு

வெட்ட வெட்ட தழைக்கும் பட்டணத்து வேம்பு அது என்ன?

தலைமுடி

ஈர புடவைக்காரி இருபத்தெட்டு சுற்றுக்காரி அது என்ன?

வெங்காயம்

பறிக்க பறிக்க பெரிதாகும் அது என்ன?

பள்ளம்

வட்ட வட்ட சிமிழில் இட்டதெல்லாம் குட்டிப் பாம்பு அது என்ன?

இடியப்பம்

வெள்ளை ஆடை உடுத்திய மஞ்சள் மகாராணி அது என்ன?

முட்டை

பா.விஸ்மிதன்

யா/சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை

தரம் 05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது விடுமுறைக்கால பொழுது போக்கு

நீண்ட இந்த விடுமுறைக் காலத்தில் நான் பொழுதைப் போக்க வீட்டிலிருந்தே பல விதமாக கழித்தேன். அதாவது மீன் வளர்த்தேன் மீனில் பல வகை மீன்களை வளர்த்தேன் அதில் குறுகிய காலத்தில் சில மீன்கள் இறந்துவிட்டன மனதிற்கு கவலையாக இருந்தது. செல்லப் பிராணிகள் வளர்ப்பதால் மன அமைதி கிடைக்கும் என நம்பினேன். அதே வேளை செல்லப் பிராணிகள் இறந்துவிட்டால் பெரும் மனவேதனையையும் தந்துள்ளது. மீன்கள் வளர்ப்பதால் வீட்டிற்கு ஒரு அழகை ஏற்படுத்தும். மீன்களை வளர்ப்பதால் நாவூறு வராது என்கிறார்கள். அதாவது பார்ப்பவர்களின் கவனத்தை மீன்கள் ஈர்ப்பதால் தமக்கு நாவூறு வராது என எல்லோரும் கூறுவார்கள்.





பாக்கு நட்டு பாக்கு கன்றுகளையும் எடுத்து விற்றேன். அதில் ஒன்று கஷ்ரமாக இருந்தது அது என்னவென்றால் கமுகங் கன்று விற்பது யாருக்கும் தெரியாது. ஆதனால் விற்க முடியவில்லை பின்பு என்ன செய்வது என யோசித்துவிட்டு நான் ஒரு மட்டையில் கமுகங்கன்றுகள் விற்பனைக்கு உண்டு என எழுதி கமுகங்கன்றின் படம் ஒன்றையும் வரைந்து வெளிக் கேற்றில் கட்டி விட்டேன். அதை பார்த்து விட்டு எல்லோரும் வந்து கமுகங்கன்றுகளை வாங்கினார்கள். எனக்கு அதிலும் மிக சந்தோசம் இருந்தது.



கிளியும் ஒன்று வளர்த்து வந்தேன் கிளிக்கு பெயர் வித்தியாசமாக வைக்க வேண்டும் என்று யோசித்தேன் அப்போது மனதில் ஒரு பெயர் தோன்றியது விச்சு அந்த பெயரை வைத்தே நான் கிளியை கூப்பிட்டேன். நான் அம்மா என்று சொல்லி சொல்லி பழக்கி கிளி அம்மா எனக் கூப்பிடத் தொடங்கியது. பின்னர் விசில் அடிப்பதற்கும் கற்றுக் கொடுத்தேன் அதன் பின் எனது பெயரை கிசோன் என்று சொல்லிக்கொடுத்தேன் ஆனால் கிளி கிசோ என்றே கூப்பிட்டது. அப்போது கிளி தனியாக இருப்பதை யோசித்தேன். கிளியை சுதந்திரமான பறக்கட்டும் என யோசித்தேன் கிளியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் கூட்டில் இருந்து திறந்து விட்டேன். மனதிற்கு மிகவும் கவலையாக இருந்தது. ஆனால் அந்தக் கிளி சில நாட்கள் என் வீட்டில் இருக்கும் மாமரத்தில் வந்து இருக்கும்.

பின் நான் கோழி வளர்ப்பதில் ஆர்வம் காட்டினேன் கோழி அடைவைத்து குஞ்சு பொரிக்க வைத்தேன் நான் நினைத்தேன் எல்லோரும் சொல்வது போல் இருபத்தொரு நாட்களில் குஞ்சு பொரிக்கும் என்று ஆனால் பத்தொன்பாவது நாள் இரவே பொரிக்க தொடங்கிவிட்டது. முதல் தடவை கோழிக்குஞ்சை பார்த்ததும் சந்தோசத்தின் மேல் சந்தோசமாக இருந்தது.

சித்திரம் வரைதலும் எனது பொழுது போக்குகளில் ஒன்றாகவும் போட்டிகளில் சென்று முதல் இடம் பெற வேண்டும் பல விதமான படம் பலவித வர்ணங்களில் படம் வரைய வேண்டும் என எண்ணம் விருப்பம். எனக்கு அதனால் என் மனதில் தோன்றுவதை வீட்டில் இருக்கும் போது வரைவேன்.

இவ்வாறு எனது பலபொழுது போக்குகளில் விடுமுறைக் காலத்தில் ஈடுபட்டேன் அது மட்டுமல்லாமல் அம்மாவுடன் இணைந்து வீட்டையும் துப்பரவு செய்து தேவையற்ற பொருட்களையும் அகற்றி வீட்டை சுத்தமாக அலங்கரித்தேன்.இவ்வாறு பல விதமாக நான் விடுமுறை காலத்ததை கழித்துக் கொண்டேன்.

ச.கிஷோன்

யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி

தரம் 08



ஒரு கோடி ரூபாய் கிடைத்தால் என்ன செய்வீர்கள் என்று கேட்டபோது 'ஒரு நூலகம் கட்டுவேன்'

மகாத்மா காந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# An Article about Vendor of sweets

The writer of the article " VENDOR OF SWEETS " is R.K.Narayan and he introduced many characters inside the Novel vendor of sweets. Mainly Jagan, Mali, Grace, Ambika, The cousin and few more characters too.

- About the writer R.K.Narayan

  R.K.Narayan was born in Madras in India and he was born in 1906 and he was educated there and at Maharaja's college in Mysore. His First published Novel was the " Swami and Friends " in 1935 and was set in the enchanting Fictional territory of Malgudi and also few more Novels which were published by Narayan in different time period and they are "The Bachelor of Arts " published in 1937, "The Dark Room" in 1938, "The English Teacher" in 1945, " Mr.Sampath" in 1949, "The Final Expert" in 1952, "Waiting for The Mahathma" in 1955, "The Sakitya Akademi award-winning The Guide" in 1958, "The Man Eater of Malgudi " in 1962, "The vendor of sweets" in 1967, "The painter of signs" in 1976, "A Tiger for Malgudi" in 1983, "Talkative Man" in 1986 and last but not least "The world of Nagaraj" was published in 1990 All these Novels were completed before his 84th age and in between all these Novels he also had completed six short stories and he also had written two travel books and fiver essay's and also translation indran epica and myths

  And, In 1980 R.K.Narayan was awarded the A.C.Benson medal by the Royal society of Literature and was made an Honorary member of the American acaademy and Institute of Arts and Letters. And In 1989 he was Made a member of Rafya sabha And sadly be was approached by death in 2001.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- Into The Novel – Introduction and characterization

Jagan :- 1.He is a vendor of sweets
2. Follower of Ghadhian principales
3.Being in a mindset of money making
4.Believer of God
5.Hard working

Cousin :- 1.Unemployed person
2.Mediator between Jagan and Mali
3.He is also cousin For whoever in Malgudi
4.And a Regular customer to Jagan's shop

Mali :- 1. Son of Jagan
2.Hater of Mother country
3.A person who hates his father

Grace :- 1.Half Chinese half Korean girl
2.Interested in Hindu culture
3.Mali and Grace are not Married but living to geather

These are very main characters of the Novel. And The plot Vendor of sweets moves in few themes in that some are

- Father and son
- Tradition vs Modern
- Western culture and Eastern culture

In these types of themes the plot moves and the first chapter stafts with the line / the words form Jagan "Conquer taste and you will have conquered the self ". And The Chapter I gives us an overview of Jagan's lifestyle and introduces the protagonist in his environment.

The by the first time he starts the plot and, Then the narrator lets us know how Jagan has a framed picture of goddess Laxshmi and offers Jasmine flowers, prayers and incense first thing in the morning and it continue with cousin in the sweet shop. In the first chapter to the 4th chapter the plot brings the conflict manner in a readers mind that always there is a fight between them (Father and son) and in this case Mali goes to America to become a writer. And in the 5th chapter Mali returns to his mother country where he was born with a half korean and half Chinese girl as introducing Grace as his wife

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

but Jagan was disturbed of Mali's message. He was afraid to ask too many questions and leaves immediately after taking them home shortly after his return Grace gives him a picnic bashef as a gift.

Form the 9th chapter the summary tells about Jagan works at a spinning wheel and to calm his mind, as Ghandhi has suggested. His encounter with china has made him reflective. He wonders if it is his destiny to help china finish the installation of the Goddess. He thinks about Natraj and is annoyed that the man would print Mali's prospectus immediately, while Jagan's own protect had languished with the printer for years

Mali enters and says that they need to speak. He says that everyone is talking about Jagan in town, including the sait of Anandha Bavan. Jagan says he does not care, because he has become a new enlightened personality. Mali hands him a telegraph that arrived that day. It is form his american business associates. They are demanding to know if Mali and Jagan are going to Financially support the sfory-writing manufacturing business by investing Jagan say that to mali to have his sweets shop and run it that he will leave it to him to run it. But Mali refuses and say that he doesn't want it and in many cases, Mali says that people are saying that Jagan's shop is no longer worth anything. And Mali put a pressure on his own father to invest lot of money for his business of else Grace doesn't have to stay here Grace will have to leave malgudi and go bach to America Their will be no reason for grace to stay here in malgudi and no opportunities for her. The main thing that Mali bought Grace with him is for the money which grace had and Mali spends all the money that grace had for the business which Mali does at that time after the money have been spend at last Mali says grace to move like wise the plot end with the 13th chapter

Conclusion

Through all these plots and Chapters their were main characters and themes were revealed and many character were introduced in the Navel The Novel was famous and written by R.K.Narayan in 1967

S.Sathsaran

J/Mahajana College

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலகத்தால் மாணவர்களாகிய நாம் பெறும் நன்மைகள்

🕮 அறிவை வளர்க்கக் கூடிய பல தரப்பட்ட விடயங்களை அறிந்து கொள்ள முடிகிறது.

🕮 எமது ஆராய்ச்சிக்கு தேவையான விடயங்களும் அங்கு கிடைக்கின்றன.

🕮 மேலும் நமது மொழி வளத்தைப் பெருக்குவதற்கும் நூலகம் உதவுகின்றது.

🕮 வாசிப்பை சரளமாக்குவதற்கும் நூலகம் முக்கிய பங்கு வகிக்கின்றது.

🕮 நாம் பாட நூல்களில் கற்றவை தொடர்பான பிற செய்திகளை அறிந்து கொள்ள முடிகின்றது.

🕮 அன்றாட நிகழ்வுகளை அறியவும் நூலகம் எமக்கு உதவுகின்றது.

🕮 கடந்தகால வினாத்தாள்களைப் பெற்றும் படிப்பதன் மூலம் பரீட்சையில் உயர் புள்ளிகளைப் பெற்றுக் கொள்ள உதவுகின்றது.

🕮 இலக்கியம், வரலாறு, பொது அறிவு, அறிவியல் என பல படைப்புக்களை பருக உதவும் தடாகம் நூலகம் ஆகும்.

வி.ஆருஜன்

யா/இந்து மகளீர் ஆரம்ப பாடசாலை

தரம் 05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்காலக் கனவு

கனவு என்பது தூக்கத்தில் வருவது அல்ல எமது இலக்கை அடையும் வரை நம்மை தூங்கவிடாமல் துரத்துவது கனவு என அறிஞர் அப்துல்கலாம் கூறியுள்ளார். அந்தவகையில் எனது கனவு எதிர்காலத்தில் ஒரு வைத்தியராக வரவேண்டும் என்பதே எனது கனவாகும். வைத்தியராக வந்து ஏழைகளுக்கு இலவசமாக வைத்தியம் செய்ய வேண்டும் என்பது எனது விருப்பமாகும்.

நான் ஒரு வைத்தியர் ஆகிய பின்னர் ஒரு வைத்தியசாலையை கட்டுவேன். அங்கு குறைந்த செலவில் பரிசோதனையை மேற்கொள்ளும் ஆய்வுகூடம், நோயுற்றவர்கள் அதிகநேரம் காத்திராமல் விரைவான வைத்தியசேவை என்பவற்றை செய்வேன். அதிகம் இயலாதவர்கள் வயதுபோன ஆட்கள் சிறுவர்கள் எனது குடும்பத்தவர்களுக்கு முன்னுரிமை கொடுப்பேன்.

எனது வைத்தியசாலையை அழகாகவும் சுத்தமாகவும் பேணுவேன் நோயாளர்களை கவனமாக கவனிப்பேன். எல்லோரிடமும் அன்பாக இருப்பேன். நோயாளர்கள் வரிசையில் காத்திருக்கும் பொழுது அந்நேரத்தை அவர்கள் பயன்படுத்துவதற்கு புத்தகங்களை வைப்பதுடன் தொலைக்காட்சியையும் வைப்பேன். நோயாளர்கள் வைத்தியசாலைக்கு வரும்பொழுது அவர்களின் மனதில் உற்சாகத்தை கொடுக்கக்கூடிய பூக்கன்றுகளை நிறைவாக நட்டு வைப்பேன். வரும் நோயாளர்கள் சுத்தம் பேணுவதற்காக கைகளை கழுவுவதற்கு தண்ணீர் வசதிகளையும் அமைப்பேன் இதுவே எனது எதிர்கால கனவு ஆகும்.

பி.கிருத்தியன்
யா/ பரியோவான் கல்லூரி
தரம்09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புத்தகங்களும் சிறுவர்களும் புனிதமானவை. வாசிப்பு மேன்மையானது**

சிறியோர் முதல் பெரியோர் வரை அனைவரும் வாசிக்கின்றோம். கிரகித்து வாசித்தல் என்பது தான் மனிதனின் முதல் படிப்பு இந்த வாசிப்புக்கு உதவுபவை பாடசாலைகள் முக்கியமாக நூலகங்கள் அங்குதான் நாம் பல புத்தகங்களை வாசிக்கின்றோம். இவற்றில் துணுக்குகள், கதைகள், பொதுஅறிவு சார்ந்த நூல்கள், கட்டுரைகள், கவிதைகள் இன்னும் பல நூல்கள்

நான் வாசித்த புத்தகங்களில் மிகவும் பயனுள்ளது சுட்டிவிகடன் ஆகும். அதில் நகைச்சுவைக்கதைகள், வரலாறுகள், அறிவியல் சார்ந்த விடயங்கள், கேலிச்சித்திரங்கள் என்பன அடங்கி உள்ளன.

அதுமட்டுமல்ல விளையாட்டு சம்பந்தமான விடயங்கள், திகில், சாகசக்கதைகள் என்பனவும் விரிந்து காணப்படுகின்றது. புத்தகம் வாசிக்க வாசிக்க அலுப்பே வராத அளவிற்கு அதில் சுவாரஸ்யமான விடயங்கள் உண்டு. இந்தியாவின் அறியப்படாத தகவல்கள், வரலாறுகளும், எகிப்தின் மம்மி பற்றிய விடயங்களும் இருக்கின்றன. தாவரங்களினதும் விலங்குகளினதும் விஞ்ஞானப் பெயர்களையும் படிப்பதற்கு தேவையான குறிப்புக்களையும் பெற்றேன்.

இவைகளையும் தவிர ஆவர்த்தன அட்டவணையின் வரலாற்றையும் அதன் பயன்களையும் அறிந்து கொண்டேன். ஏ.்.ப்ஏ பக்கங்கள் மூலம் இந்திய சிறார்களின் திறன்களையும் குழு உணர்வையும் கண்டு பிரமித்தேன். பேய்க்கதைகளையும் மர்மமான விடயங்களையும் அறிந்து திகிலுற்றேன்.

இவை மட்டுமல்ல நூலகத்திற்கு வருவது மிகவும் மகிழ்வூட்டும் களமாக அமைவதை உணர்கிறேன். மேலும் மேலும் அறிவு பூர்வமான நூல்களை வாசித்து அறிந்து கொள்ள வேண்டும் என்ற பேரார்வம் நிறைய உள்ளது.

உண்மையான வாசகன் வாசிப்பை முடிப்பதில்லை என ஆஸ்கார் வைல்ட் கூறிச் சென்றுள்ளார். அறிவை மென்மேலும் வளர்க்கும் களமாக நூலகமும் அதில் பயன்பெறும் பயனாளிகளாக மாணவர்களும் சிறப்பான இடத்தைப் பெறுகின்றனர்.

இவ்வாறாக நூலகத்தில் அறிவுசார் விடயங்களையும் நாட்டு நடப்புகளையும் உலக நடிப்புக்கள் போன்ற பல்வேறு விடயங்களையும் அறிந்து நல்வாழ்வு வாழ்வோமாக.




போல் நியூலியன்
யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி
தரம் 07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தை பற்றிய எனது அனுபவம்

எமது கிராமத்தில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததும் சிறப்பு வாய்ந்ததாகவும் சுன்னாகம் நகரில் உள்ள பொதுச்சந்தை விளங்குகிறது. எமது நகரத்தையே சிறப்பிக்கும் தன்மை வாய்ந்ததாக விளங்குகின்றது.

காலை4 மணிக்கு ஆரம்பிக்கும் அல்லங்காடியாக மாலைவரை இடம்பெறுகின்றது. வெவ்வேறுபட்ட இடங்களிலும் இருந்தும் மக்கள் வருகை தந்து பொருட்களை விற்கவும் வாங்கவும் செய்கின்றனர். சந்தையின் நுழைவாயிலை அண்மித்ததும் ஐயா வாங்கோ அம்மா வாங்கோ அண்ணா வாங்கோ அக்கா வாங்கோ எனக்கூவி அழைக்கும் வியாபாரிகளின் குரல் ஒரு பக்கமும் எங்கே சென்று வாங்கலாம் என திகைத்து நிற்கும் மக்கள் ஒரு புறம் பார்க்கும் போது கண்கொள்ளாக்காட்சியாக அமைகின்றது.

சந்தையின் ஒருபுறம் அத்தியாவசியமான பொருட்களை விற்கும் கடைகளும் வண்ணமயமாக காட்சியளிக்கின்றன. மறுபுறம் வண்ண வண்ண ஆடைகள் தொங்கும் காட்சியும் கண்ணைப் பறிக்கின்றன. சந்தைக்கு மறுபுறம் பல விதமான கடல் உணவுகளை விற்கும் மீன் சந்தையும் சந்தைக்கு மிகவும் எழிலூட்டுகின்றது. மதியநேரம் ஆனதும் சனக்கூட்டம் அலைமோதும் அழகு கண்ணைப்பறிக்கும். இவ்வாறாக எமது கிராமத்தின் சந்தையின் வனப்பை அடுக்கிகொண்டே செல்லலாம்.

சி.தன்சிகா
யா/ சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை
தரம் 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேருந்து பயணம் பற்றி எமது சிந்தனை

பேருந்து பயணங்கள் மிகவும் அலாதியானவை. நான் மட்டக்களப்பிற்கு பயணம் செய்தது எனக்கு மிகவும் பிடித்திருந்தது. பேருந்தின் யன்னல் வழியாக பல கடைகள் விடுதிகள் என்பவற்றை பார்த்தேன். பல மலைத் தொடர்களை பார்த்தேன். இந்த பேருந்து பயணம் எனக்கு மிகவும் விருப்பமாக இருந்தது. பல யானைக் கூட்டங்களைக் கண்டேன். அவை ஒற்றுமையாக இருந்ததை பார்த்து மகிழ்ச்சியடைந்தேன். பொலநறுவை நகரின் ஊடாக செல்லும் போது மன்னர்கள் கட்டிய குளங்களை கண்டு ரசித்தேன். பல மிருகங்களை கண்டேன். மிகிந்தலை விகாரை என்பவற்றை கண்டேன். இயற்கையான காற்று வீசியது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. பேருந்தில் பலர் ஆனந்தமாக கதைத்துக் கொண்டிருந்தனர். சிலர் பேருந்தில் தொலைக்காட்சி பார்த்தனர். இந்த பேருந்து பயணம் எனக்கு புதிய அனுபவத்தை தந்தது.

தி.தரணிகன்
யா/ ஸ்கந்தவரோதயா கல்லூரி
தரம்8




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org